IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No-126/2024

Deposition of Witness PW3

Name : குழந்தைவேல் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது பர்கூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27 /2/ 2023 ஆம் தேதி அன்று ஈரோடு கிழக்கு சட்டமன்ற தேர்தல் பறக்கும் படையில் பவானி வட்டார புள்ளியல் ஆய்வாளர் மெய்யப்பன், அந்தியூர் முதல் நிலை காவலர் பூமாலை , ஈரோடு அனைத்து மகளிர் காவல் நிலைய காவலர் நிரஞ்சனா ஆகியோருடன் நான் பணியிலிருந்து போது 15 /2/ 2023 ஆம் தேதி பணியில் இருந்த போது ஈரோடு மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறையிலிருந்து கொடுக்கப்பட்ட தேர்தல் பணிமனை சம்பந்தமான குறிப்புகளுடன் சோதனை செய்ய சென்றபோது காலை 10 மணி அளவில் ஈரோடு வள்ளுவர் வீதி மரப்பாலம் அருகில் திமுக தேர்தல் பணிமனையை ஆய்வு செய்தபோது அதன் அமைப்பாளர் சசிகுமார் என்பவர் அனுமதி இன்றி தேர்தல் பணிமனை அமைத்திருப்பது தெரியவந்தது. அது சம்பந்தமாக ஈரோடு நகர காவல் நிலையம் வந்து பறக்கும் படை கண்காணிப்பாளர் மெய்யப்பன் புகார் அளித்தார்.

அவருக்கு துணையாக நானும் நிலையம் வந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நாங்கள் ஆய்வுக்கு சென்றது ஈரோடு மரப்பாலம் பகுதி என்றால் சரிதான். ஈரோடு மரப்பாலம் பகுதியில் வள்ளுவர் வீதி என்ற பெயரில் வீதியை இல்லை என்றால் சரியல்ல. மரப்பாலம் பகுதியில் புதுவீதி, நடுவீதி, குறுக்கு வீதி சந்து, பூம்புகார் தெரு, மறைமலை அடிகளார் வீதி, குப்ப காட்டான் சந்து, சம்பந்தர் வீதி பொற்கை பாண்டியன் வீதி, நாலடியார் வீதி பழைய பூந்துறை ரோடு, ஆகிய பகுதிகள்தான் உள்ளது என்றும் வள்ளுவர் வீதி இல்லை என்று சொன்னால் சரியல்ல.. நாங்கள் பணிமனையை ஆய்வு செய்தபோது கட்சிக்கொடி அல்லது பேனரோ கைப்பற்றினோமோ என்றால் இல்லை.. அந்த நேரத்தில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து நிலையத்தில் ஒப்படைத்தோமா என்றால் எடுத்தார்கள் ஆனால் ஒப்படைத்தார்கள் என்று எனக்கு தெரியாது.. எதிரி தான் பணிமனை அமைத்தார் என்பதை யாரை விசாரித்து தெரிந்து கொண்டோம் என்றால் அந்த வீதியில் உள்ள நபர்களை விசாரித்து தெரிந்து கொண்டோம். மாற்றுக் கட்சியினர் கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில் எதிரி மீது இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அந்தப் பகுதியில் உள்ள வார்டின் திமுக கவுன்சிலராக உள்ளதால் அவர் மீது அரசியல் அழுத்தத்தின் காரணமாக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No-126/2024

Deposition of Witness PW4

Name : கிருஷ்ணமூர்த்தி Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2025

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2025 அன்று பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 17.02.2023 அன்று மாலை 18 மணிக்கு நிலைய பொறுப்பு அலுவலகத்தில் இருந்தபோது ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற தேர்தல் கண்காணிப்பு பணியில் இருந்த பறக்கும் படை ஒன்னு சி குழுவின் பொறுப்பாளர் மெய்யப்பன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரை பெற்று நிலைய குற்ற எண்.58/2023, சட்டப்பிரிவு171F IPC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு முதல் தகவல் அறிக்கையின் நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.. ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

மரப்பாலம் பகுதி ஈரோடு நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்டது நிலையத்திலிருந்து சிறிது தொலைவிலேயே அமைந்துள்ளது. மரப்பாலம் பகுதியில் வள்ளுவர் வீதி என்பது இல்லை என்றும் புகாரில் தவறாக கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. புகார் உடன் வீடியோ புகைப்படம் ஆகியவை கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான் புகார் மட்டும் தான் என்னிடம் கொடுக்கப்பட்டது. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியில்லை.

மறுவிசாரணை இல்லை.